மாணவர்களுக்கு தாங்கும் திறன் பரிசோதனை

பள்ளி தலைமை ஆசிரியர் உள்பட அனைவர் மீதும் உரிய நடவடிக்கை!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உறுதி!

சென்னை,டிச. 8- தமிழகத்தில் உள்ள அனைத்து நூலகங்களில் பணியாற்றும் நூலகர் களுக்கு தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்படுவதை அடுத்து, சென்னையில் பயிற்சியை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.

கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் இரண்டு நாட்கள் பயிற்சி நடக்கிறது. இதில் 850 நூலகர்கள் பங்கேற்கின்றனர். இந்த பயிற்சியை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் அளித்த பேட்டி:

சென்னையில் ஐ.ஐ.டி. வளாகத்தில் உள்ள பள்ளி ஒன்றில் மாணவ, மாணவியரை ஓட விட்டு மருத்துவ சோதனை (தாங்கும் திறன்) செய்துள்ளதாக தெரியவந்துள்ளது. அதுபோன்ற முறை தவறானது. மாணவர்களை சோதனை செய்வது என்பது ஒன்றும் தனியாக இல்லை.

பள்ளிக் கல்வித்துறையில் பொதுவாக உடல்நலம் குறித்து அறிந்து கொள்ளச் செய்வது போன்றவை செய்யப்படும். எதற்காக ஓட விட்டு சோதித்துள்ளனர் என்பது தெரியவில்லை. என்ன எண்ணத்தில் இதை செய்துள்ளனர் என்பது தெரியவில்லை. இதுகுறித்து அந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் மீது நடவடிக்கை எடுத்துள்ளனர். இருப்பினும் மருத்துவர்கள் மூலம் எங்களுக்கு வரக்கூடிய தகவலின் அடிப்படையில் மேற்கொண்டு அதற்கான முடிவு எடுக்கப்படும். யாராக இருந்தாலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். 3 மாவட்டங்களில் மழை பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக விழுப்புரம் மாவட்டத்தில் 279 பள்ளிகளில் மழைநீர் சூழ்ந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

200 பள்ளிகளில் சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இன்னும் இரண்டு நாட்களில் மாணவர்களுக்கு புத்தகங்கள், நோட்டுகள் வழங்கப்படும். டிசம்பர் 2ம் தேதியில் இருந்து அரையாண்டு செய்முறைத் தேர்வு நடக்க வேண்டியது. 15ம் தேதிக்குள் இயல்பு நிலை திரும்பினால் உடனடியாக தேர்வு நடத்தலாம் என்றும், பாதிப்பு அதிகம் உள்ள பள்ளிகளில் அந்தந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் முடிவு எடுத்து நடத்தவும் தெரிவித்துள்ளோம். இவ்வாறு அன்பில் மகேஸ் பேட்டியில் தெரிவித்தார்.

இரா.துரைராஜ் தலைமையில்

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைக்கிறார்

சைதை 170 - 170 அ வட்டத்தில் மருத்துவ முகாம்!

வட்டச் செயலாளர்கள் க.மணி - கோட்டூர் சண்முகம் வேண்டுகோள்

சென்னை, டிச.8 170 அ வட்டச் செயலாளர் கோட்டூர் சண்முகம், 170-வது வட்டச் செயலாளர் க.மணி ஆகியோர் விடத்துள்ள வேண்டுகோள் வருமாறு

சைதை கிழக்குப் பகுதி 170, வது வட்டத்தில் இன்று (8:12:2024 ஞாயிற்றுக்கிழமை) காலை:08:00 மணி முதல் மாலை:03:00 மணி வரை கோட்டூர்புரம் சித்ரா நகர் குடியிருப்பு முத்து மாரியம்மன் கோயில் அருகில் M. G. M. மருத்துவமனை மருத்துவர்கள் பங்கேற்கும் (மழைக் கால சிறப்பு மாபெரும் இலவச மருத்துவ முகாம்) மண்டல குழு தலைவர் பகுதிச் செயலாளர் இரா. துரைராஜ். முன்னிலையில் நடைபெறுகிறது.

இதனை மருத்துவம்,மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, மா.சுப்ரமணியன் மருத்துவ முகாமை துவங்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் பொதுமக்களும் கழக நிர்வாகிகளும் கழக முன்னோடிகளும் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு 170 -வது வட்டச் செயலாளர் க.மணி, 170 அ வட்டச் செயலாளர் கோ. சண்முகம் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரியில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் நடைபெற்ற துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாவில் மாநில செயலாளர் டாக்டர் சுபேர்கான் தலைமையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் நல உதவிகள் வழங்கினார். உடன் துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் பலர் உள்ளனர்.

துணை முதல்வர் பிறந்தநாள்! ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. தலைமையில்

சென்னை வடக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் மாபெரும் மருத்துவ முகாம்!

டாக்டர் கனிமொழி சோமு எம்.பி. - டாக்டர் எழிலன் எம்.எல்.ஏ. துவக்கி வைக்கின்றனர்!

சென்னை, டிச. 8- இளைஞர் அணி மாநில செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் மாபெரும் மருத்துவ முகாம் கீழ்கண்ட விவரம்படி நடைபெற உள்ளது.

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., (மாவட்ட பொறுப்பாளர்) தலைமையில் இன்று (8.12.2024- ஞாயிற்றுக்கிழமை) காலை 8:00 மணியளவில் நார்த்விக் பள்ளி, ஷேக் மேஸ்திரி தெரு, ராயபுரம், சென்னை13 நடைபெறுகிறது.

வரவேற்புரை: டாக்டர் என் தேவகுமார், டாக்டர் டி. சுரேந்தர், பி.சதீஷ்குமார், எம்.என்.ஜெகன், ஜே. ஜே.பிராங்கிளின், என். பி.அஜித் குமார், டாக்டர் விஜயகுமார், டாக்டர் சீனிவாசன், டாக்டர் என்.கார்த்திக், ஏ.ஷேக் அப்துல்லா, கே.கே.சரவணன், வீ.விஜயகுமார், டாக்டர் சுரேஷ் பாபு.

முகாமை துவக்கி வைப்பவர்கள் டாக்டர் கனிமொழி சோமு எம்.பி., டாக்டர் எழிலன் எம்.எல்.ஏ.,

இம்முகாமில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம் பி, ஐட்ரீம்ஸ் மூர்த்தி எம்எல்ஏ, எபினேசர் எம்எல்ஏ, தா இளையஅருணா எம் சி, மாவட்ட தேர்தல் பார்வையாளர்கள் சுபேர்கான் , கே.வி.லோகேஷ், கன்னிகை கோ.ஸ்டாலின், பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் , இரா லட்சுமணன், க.ஜெயராமன், அ.முருகன் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள் பகுதி நிர்வாகிகள் வட்டச் செயலாளர்கள் நிர்வாகிகள் அனைத்து மாவட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நன்றியுரை : ஆர்.வி. கணேஷ் வட்டச் செயலாளர்

இவ்வாறு மாவட்ட அமைப்பாளர் டாக்டர் வை.கலைவாணன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் - சி.மகேஷ்குமார் தலைமையில்

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர்அணி சார்பில் - 10 கருணை இல்லங்களுக்கு நல உதவிகள்!

அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் வழங்கினார்!

சென்னை, டிச. 8 - சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம் 13,இல்லார்க்கு நாமே உறவு! எல்லோர்க்கும் உதயமே வரவு!எனும் தலைப்பில்10 கருணை இல்லங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று (7.12.2024 சனிக்கிழமை) காலை 08.00 மணியளவில், சென்னை, ஜி. கே.எம்.காலனி, பட்டுமேடு நாடார் திருமண மண்டபத்தில்நடைபெற்றது.

இந்நலத்திட்ட விழாவில் தலைமை செயற்குழு உறுப்பினர் சி.மகேஷ்குமார் தலைமை வகிக்க,சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அற நிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எ.நாகராசன் எம்.சி, ஐ.சி. எப்.வ. முரளிதரன், கே.சந்துரு, சரிதா மகேஷ்குமார் எம்.சி, தேவஜவகர், எஸ்.பன்னீர் செல்வம், எஸ்.தனசேகர், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார் முன்னிலை வகிக்க, இரா. தயாளன், எம்.சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி, எம்.டி.தமிசெல்வன், செ.முருகன், என். சௌந்தர்ராஜன், என்.பவுல்ராஜ், என்.ராமச்சந்திரன் ஆகியோர் வரவேற்றனர்.

இந்நலத்திட்ட விழாவில்1) ராஜ்பாபா முதியோர்இல்லம் 2)சேப்இந்தியா 3) சிகாகம் யூனிட்டிசர்வீஸ் 4) மரியாளையா குழந்தைகள் காப்பகம் 5) சென்னபுரி அன்னதான சமாஜம் 6)எஸ்.ஐ.பி.என் 7)ஏ.ஆர்.யூடபிள்யூஇ 8)பிரபா முதியோர் இல்லம் 9)சி.எஸ்.ஐபுத்தூர் பள்ளி, 10) ஸ்ரீஅருணோ தயம் ஆகிய பத்து கருணை இல்லங்களுக்கு மூன்று மாதத்திற்கான மளிகை பொருட்கள் மற்றும் மின்வி சிறிபெட்ஷீட், சிறுவர்களுக்கான ஊட்டச்சத்து பொருட்கள் முதியோர்களுக்கானடையப்பர், மருந்து பொருட்கள், மாற்றுத்திறனாளிக்கான மிதிவண்டி என ரூபாய் 9,15,300 மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் 10 கருணை இல்லங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

மேலும், இந்நலத்திட்ட விழாவில், சென்னை மாநகர மேயர் ஆர். பிரியாராஜன், எம்.தாவுத்பீ எம்.சி, கே. சாரதா எம்.சி, யோகபிரியா தனசேகர் எம்.சி, பி.அமுதா பொன்னிவளவன் எம்.சி, சி.ஸ்ரீதணி எம்.சி. கொளத்தூர் கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: பி. ஊமைதுரை, பி.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி. சி.ரவி, கே.பி.ஆதவன்மணி, ப.அன்பரசு, டி.சந்திரசேகர்ஆகியோர் சிறப்பித்தார்.

வட்ட கழக செயலாளர்கள்: எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி ஆகியோர் நன்றி கூறினர்.

தா.மோகன்குமார் எம்.சி. தலைமை! இரா.துரைராஜ் எம்.சி, எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி முன்னிலை!

168வது வட்டத்தில் துணை முதல்வர் பிறந்த நாள்: மாபெரும் மருத்துவ முகாம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்!

சென்னை, டிச. 8 - சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 168 அ வட்ட கழகம் சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு, உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு 168வது வட்ட கழக செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான தா.மோகன்குமார் தலைமையில் சைதை கிழக்கு பகுதி செயலாளர் 13வது வார்டு குழு தலைவருமான இரா. துரைராஜ், சைதை மேற்கு பகுதி செயலாளர் 10வது வார்டு குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூத்தி, 168வது வட்ட கழக செயலாளர் நா. ராதாகிருஷ்ணன், முன்னிலையில் மாவட்ட பிரதிநிதி ச.சேகர், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கொடி பாலா, வட்ட கழக நிர்வாகிகள் ஏ.சீனிவாசன், த.பாண்டியன், மீனா பரமானந்தம், ஜி.என்.நாராயணன், பகுதி பிரதிநிதிகள் ஈகை ஹரியப்பன், என்.மேகநாதன், எம்.லிங்கேஸ்வரன், டி.மனோகரன், ஜி.வெங்கடேசன், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் மே.குணா வரவேற்பில் 08.12.2024 ஞாயிற்றுக்கிழமை காலை சரியாக 08.00 மணிமுதல் பகல் 3.00 மணிவரை 168அ வட்டம் கிண்டி நாகிரெட்டி தோட்டம் பகுதியில் சிம்ஸ் மருத்துவமனை மருத்துவர்கள் சிகிச்சை அளிக்கும் மாபெரும் மருத்துவ முகாமினை சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தொடங்கி வைக்கிறார்

நிகழ்ச்சியில் சைதை கிழக்கு பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட, மற்றும் பகுதி நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள், குறிப்பாக 168அ மற்றும் 168வது வட்டத்தில் உள்ள நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்

எஸ்.ஆர். ராஜா சுரேஷ்குமார் தலைமை! நந்தனம் கி.மதி எம்.சி. முன்னிலை!

துணை முதல்வர் பிறந்த நாள்! 122வது வட்டத்தில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, டிச.08 சென்னை, தென் மேற்கு மாவட்டம் சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் 47வது பிறந்த நாளை முன்னிட்டு, 122வது வட்டத்தில் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி இன்று (08.12.2024, ஞாயிற்றுக்கிழமை) பகல் 11மணியளவில், 122 வது வட்டக் கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜாசுரேஷ்குமார் தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. முன்னிலையில், ஆழ்வார்பேட்டை தெரு திருவள்ளுவர் சாலை சந்திப்பு, அண்ணா சிலை அருகில் மற்றும் ஆலையம்மன் கோவில் சந்திப்பு, தேனாம்பேட்டை ஆகிய பகுதிகளில் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறும்.

இந்நிகழ்ச்சியில் தென் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு கலந்து கொண்டு கழகக் கொடியேற்றி அறுசுவை உணவு வழங்குகின்றார்.

எனவே இந்நிகழ்ச்சிக்கு மாவட்டபிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழகத்தை சார்ந்த நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் (BLA2), பாக உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சென்னைத் தெற்கில் ஒரு மாதம் முழுவதும்

“உதயநிதியின் உதயநாள்” விழா

364 சொற்பொழிவாளர்கள் பங்கேற்கும்

182 பிறந்தநாள் கூட்டங்களின் “இன்றைய நிகழ்ச்சிகள்”

08.12.2024 - ஞாயிற்றுக்கிழமை

வ.எண்	சொற்பொழிவாளர்கள்	இடம்	தலைமை
1.	கம்பம் பாண்டிதுரை மு.முஹம்மது அஸ்மத்	168 வட்டம் - சண்முகராஜா தெரு, ஈக்காட்டுத்தாங்கல், சைதாப்பேட்டை கிழக்கு பகுதி	கே.எஸ்.பாபு, என்.சுதாகர் மாவட்ட து.அமைப்பாளர்கள்
2.	ஆலங்குடி செல்வராஜ் சகாய பெபிலா	137 வட்டம் - காணு நகர், நெசப்பாக்கம், கலைஞர் நகர் தெற்கு பகுதி, விருகம்பாக்கம்.	D.அசோக்குமார் இளைஞர் அணி பகுதி து.அமைப்பாளர்
3.	லயோலா ராஜசேகர் ப.அஹமது சுல்தானா	175 அ வட்டம் - மோகனபுரி, 1வது தெரு, ஆதம்பாக்கம், வேளச்சேரி மேற்கு பகுதி.	வி.சக்திவேல் வட்டச் செயலாளர்
4.	குளித்தலை சலாவுதீன் ரோஜா	191 வட்டம் - அண்ணாசாலை, ஜல்லடியான்பேட்டை, சோழிங்கநல்லூர் மத்திய பகுதி.	ஜி.ரவி வட்டச் செயலாளர்
5.	இளந்தளிர் இளங்கோ வே.குணஸ்ரீ	150 வட்டம் - செட்டியார் அகரம், காரம்பாக்கம், மதுரவாயல் தெற்கு பகுதி	சி.சுந்தர் வட்டச் செயலாளர்
6.	கவிஞர் கோனூர் வைரமணி கி.ரேஷ்மா	195 வட்டம் - எழில் நகர், மேட்டுக்குப்பம், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி.	க.ஏகாம்பரம் வட்டச் செயலாளர்
7.	மன்னை இளங்கோ இரா.செ.கபில்சாய்	184 வட்டம் - சீவரம், செல்வகணபதி அவென்யூ முதல் தெரு, பெருங்குடி, சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி.	இரா.இராஜேஷ்குமார் மாவட்ட பிரதிநிதி

9444129952

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பிப்போர் :

மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அளவிலான அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். எனவே கழகத் தோழர்கள் பெருந்திரளாக இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

அன்புடன் : அமைச்சர் மா.சுப்பிரமணியன் B.A., LL.B.,
மாவட்ட கழக செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.